## 68

**தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து**
**மன்னுயிர்க் கெல்லா மினிது.**

**பி.மா.: மா நிலத்து மன் உயிர்க்கு எல்லாம் தம்மில்**
**தம் மக்கள் அறிவு உடைமை இனிது.**

பொருள்: மாநிலத்து மன் உயிர்க்கு எல்லாம் - பெரு வையத்திலுள்ள பெருமை பொருந்திய மக்களெவர்க்கும், தம்மில் - (பெற்றோர்) தம்மைவிட, தம் மக்கள் - தம் பிள்ளைகளின், அறிவு உடைமை - மேம்பட்டு வரும் அறிவுடைமையானது, இனிது - அப் பெற்றோர்க்கு இனிதாகும்.

கருத்து: பெற்றோரினும் மக்கள் அறிவான் மேம்படுதல், அப் பெற்றோர்க்கு இனிதாகும்.

தந்தை மகனைச் சான்றோனாக்குதலை முற்பாட்டிற் குறித்த ஆசிரியர், இப்பாட்டில் அவ்வாறு கல்வி வல்ல மக்கள், தம்மினும் அறிவால் உயர்ந்தாராய்த் திகழ்ந்தால் அதுபற்றி மகிழ்வார்கள் என்று குறித்தார்.

மன் - பெருமை. மன்னுயிர் என்றதால் மாந்தர் என்பது பெற்றாம்.

மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிது என்றதால், மக்களியற்கைப் பண்பே அதுவாகும் என்றாராயிற்று.

## 69

**ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்**
**சான்றோ னெனக்கேட்ட தாய்.**

**பி.மா.: தன்மகனை சான்றோன் என கேட்ட தாய்**
**ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும்.**

பொருள்: தன் மகனை - தான் ஈன்ற மகனை, சான்றோன் என - கல்வி, கேள்வி நிறையப்பெற்றவன் என்று, கேட்ட தாய் - பிறரும் சொல்லுதலைக் கேட்ட தாயானவள், ஈன்ற பொழுதின் - ஆண் குழந்தை பெற்றதாக மருத்துவச்சியால் சொல்லக் கேட்ட பொழுது உண்டானதைவிட, பெரிது உவக்கும் - மிகுதியும் மகிழ்ச்சியடைவாள்.

**கருத்து:** உலகினர் தம் மகனைச் சான்றோன் என்று சொல்லக் கேட்ட தாய் பெரு மகிழ்ச்சியடைவாள்.

தன்* மகன் சான்றோன் என்பதைத் தாய் அறிந்து வைத்தும், அது பற்றி மகிழ்ச்சி கொள்ளாள் ஏன்? தன் மகன் சான்றோன் என்பதை அவள் அறிவாள். அதன் மேலும், உலகினர் அவ்வுண்மை யறிந்து – அவனது சான் றாண்மை அறிந்து கூறியக் கால், அதற்கே மகிழ்வாள் என்பார் இவ்வாறு கூறினார் ஆசிரியர்.

**- குயில், கிழமை இதழ், 17. 1. 1961**

## 70

**மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை**
**என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்.**

**பி.மா.:** **மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என் நோற்றான் கொல் எனும் சொல்.**

பொருள்: மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி – மகனானவன் தன்னைக் கல்வி, கேள்விகள் நிறையச் செய்த தன் தந்தைக்குச் செய்ய வேண்டிய உதவி என்னெனில், இவன் தந்தை எந் நோற்றான் கொல் எனும் சொல் – இவனுடைய தந்தையானவன் இந்த நல்ல மைந்தனைப் பெறவும், இவனைச் சான்றோனாக் கவும் என்ன தவத்தைச் செய்தானோ என்ற சொல்லேயாகும்.

கருத்து: இந்த நன்மகனைப் பெற இவன் தந்தை என்ன தவத்தைச் செய்தானோ என்று உலகம் சொல்லும் ஒரு சொல்லை ஆக்குவதுதான் மகன் தந்தைக்குச் செய்ய வேண்டிய உதவியாகும்.

மகன் தந்தைக்குச் செய்ய வேண்டிய கடன் கூறப்பட்டது.

இவ்வதிகாரத்தால் மக்கட்பேற்றின் அருமையும், பயனும், இனிமையும், மக்களுக்குத் தந்தை கடனும், மக்களிடம் தந்தை எதிர்பார்க்கத் தக்க கடனும், தாய்க்கு மக்கள் ஏற்படுத்தும் இன்பமும் விரித்தார் ஆசிரியர்.

தந்தை தவம் செய்தலாவது அன்பு, அறம் ஒழுக்கங்களில் பொறுப்பேற்றல்.

**- குயில், கிழமை இதழ், 24. 1. 1961**

---

* மூல (குயில்)த்தில் 'கொண்டான்' என்றுள்ளது.

## அதிகாரம் - 8

### அன்புடைமை

அஃதாவது, பிற உயிர்களுடனுள்ள தொடர்பினின்று தோன்றுவ தோர் உணர்வுடைமை. அன்பு - தொடர்பு. அத் தொடர்பினின்று தோன்றும் உணர்வுக்கு ஆனது ஆகு பெயர். உடைமை - கொண்டிருக்குந் தன்மை.

வாழும் உடல், உயிர் இரண்டிற்கும் உள்ள தொடர்பும், உடலும் உயிரும் கொண்ட உலகத்தான் ஒருவனுக்கும், அவ்வுலக மக்கட்கும் உள்ள தொடர்பும், அவ்வுலகத்துள்ள ஒருமொழி பேசுவானுக்கும் அம் மொழி பேசும் மக்களுக்கும் உள்ள தொடர்பும், அம்மொழியுடைய ஊரானான ஒருவனுக்கும் அவ்வூர் மக்களுக்கும் உள்ள தொடர்பும், அவ்வூரின் அமைந்த ஒரு குடும்பத்தானுக்கும் அக்குடும்பத் தினர்க்கும் உள்ள தொடர்பும், அக்குடும்பத்தின் ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உள்ள தொடர்பும், பெற்றோருக்கும் பிள்ளைகட்கும் உள்ள தொடர்பும் உடன்பிறந்த ஒருவனுக்கும் உடன்பிறந்தார்க்கும் உள்ள தொடர்பும் என அத்தொடர்பு பலவாக வைத்து எண்ணப்படும்.

அஃதேயுமன்றி, வானப் பெருவெளியில் தாழாது நிலை நிற்கும் ஓர் உருண்டைக்கும், பிறவுருண்டைகட்கும் தொடர்பு உண்டு என்பர் பொருட் பெற்றியுணர்ந்தார். அத்தொடர்பும் அன்பே என வைத்து அன்பின் ஆற்றலை உற்றுணர்க. இனி வேறு முகத்தான் அன்பினது உயர்வு காட்டப்படும். அஃதாவது அன்பு இன்றேல், அனைத்துலகும் அனைத்துயிரும் ஒன்றற் கொன்று தொடர்பில்லாத துகள்களாகப் பறந்து மறைந் தொழியும் என்பதாம்.

வாழாது வாழ்ந்த தமிழர், அறிவு வாழ்க்கை பெற்ற நாள். அன்பின் உண்மை கண்ட நாளேயாகும். சமையக்கணக்கர் பிற்றை நாளில் அஃதறிந்தாராக, அன்பே கடவுள் என்று கூறித் தம் பிழைபாட்டை நீக்கிக் கொள்ள முயன்றார்கள்.

அன்பு உணர்வின் வழியது. உள்ளது சிறத்தல் என்ற கொள்கை யால் உணர்வே அன்பு, அன்பே உணர்வு என அறிய வேண்டும்.

அன்பு அல்லது உணர்வு என்பது ஒன்றை உண்டு பண்ணாதது. அது மற்றொன்றினின்றும் தோன்றாதது. என்றும் உள்ளது. இதைத்தான் முதற்பாட்டில் பகவன் என்றார் என்பது முன்னரே விளக்கப்பட்டது.

மக்கள் பெறத்தக்க ஒன்று அன்பு. அன்பு என்பதன் வேர்ச்சொல் அன் என்பது. தொடர்பு என்பதே அதன் பொருள். அன்னை என்பதிலும் அன்றில் என்பதிலும் வேர்ச்சொல் அன் என்பதே. தொடர்பு என்பதே அதன் பொருளாவதை உணர்ந்து இன்புறுக. அன்னை - மக்களோடு தொடர்புடையவள்; அன்றில், தன் துணையோடு தொடர்புடையது.

## 71

**அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்**
**புன்கணீர் பூசற் றரும்.**

**பி.மா.: ஆர்வு அலர் புன்மை கண் நீர் பூசல் தரும்**
**அன்பிற்கும் அடைக்கும் தாழ் உண்டோ?**

பொருள்: ஆர்வு - ஆர்வத்தால், அலர் - வெளிப்படுகின்ற, புன்மை கண்ணீர் - புல்லிய கண்ணீரானது, பூசல் தரும் - தூற்றி விடும் ஆதலின், அன்பிற்கும் - பிற உயிர்மேல் ஏற்படும் தொடர் புணர்ச்சிக்கும், அடைக்கும் தாழ் உண்டோ - தெரியாது வைத்துச் சாத்தும் தாழ்ப்பாள் உண்டோ?

கருத்து: தொடர்புணர்ச்சியை மறைத்தல் அரிது.

தாழ்ப்பாள் - தாழ். இழி வழக்கு. அன்பிற்கும் என்பதன் உம்மை உயர்வு சிறப்பு. புன்மை-கண்ணீர்-புன்கணீர், மை யீறு போயிற்று.

அன்பு என்பதற்குக் காதல் என்று பொருள் கூறினார் பரிமேலழகர். அது பொருந்தாது. அவ்வாறு கூறிய அவரே, பின்னர் தொடர்பு பற்றி உண்டாகும் காதல் என்று குறிப்பிடுவதும் காண்க. இஃதன்றியும்,

**அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு**
**என்போ டியைந்த தொடர்பு.** - *குறள் 73*

என்று கூறிய இடத்தும் உற்று நோக்குக. இனி, புன்கணீர் பூசல்தரும் என்பதற்குத் “தம்மால் அன்பு செய்யப்பட்டாரது துன்பங்கண்டுழி அன்புடையார் கண் பொழிகின்ற புல்லிய கண்ணீரே உண்ணின்ற அன்பினை எல்லோரும் அறியத் தூற்றும் என்று பொருள் கூறினார் அவர். பிறர் துன்பம் கண்ட இடத்தில் மட்டும் கண்ணீர் வரும் என்பது

பொருந்தாது. பிறர் இன்புறுதல் கண்டு இன்புறுதலும், துன்புறுதல் கண்டு துன்புறுதலும் அன்பு என அறிதல் வேண்டும். அவர் அன்பு என்பது தொடர்பு என்ற உண்மைப் பொருளை அறியாமையால் இவ்வாறு கூறினார் என்க. இங்கு மற்றொன்றும் நினைவுகொள்ள வேண்டும், இன்புறக் கண்டு இன்புறும் போதும் கண்ணீர் வரும் என்பது.

## 72

**அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா**
**ரென்பு முரியர் பிறர்க்கு.**

**பி.மா.: அன்பு இல்லார் எல்லாம் தமக்கு உரியர் அன்பு**
**உடையார் பிறர்க்கு என்பும் உரியர்.**

பொருள்: அன்பிலார் எல்லாம் தமக்கு உரியர் - அன்பில்லாதவர் எவரும் பொருள் முதலியவற்றால் தமக்கே பயன்படுபவர். அன்புடையார் பிறர்க்கு என்பும் உரியர் - அன்புடையவர் பிறர்க்குப் பொருள் முதலியவற்றால் பயன்படுவது மட்டுமன்றித் தம் உடலாலும் பயன்படுவார்.

கருத்து: அன்புடையார் பிறர்க்குத் தம் உடல், பொருள், ஆவி மூன்றாலும் பயன்படுவர்.

தமக்கு உரியர் என்றது, தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் தமக்கே பயன்படுத்துபவர் என்றவாறு. இங்கு உடல் என்றது உடலுழைப்பை. பிறர்க்குப் பயன்படுவதையும் இவ்வாறு கொள்க.

என்பு - உடலுக்கு ஆகுபெயர். என்பும் உரியர் ஆதலை,

**பாடி நின்றனென் ஆகக் கொன்னே**
**பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தல், என்**
**நாடிழந் ததனினும் நனிஇன் னாதென**
**வாள்தந் தனனே தலைஎனக்கு ஈய.**

*- புறம் 165*

எனப் பேசப்படும் குமணன் முதலியோரிடத்துக் காண்க. என்பும் என்றதிலுள்ள உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை.

**- குயில், கிழமை இதழ், 24.1.1961**

## 73

**அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்**
**கென்போ டியைந்த தொடர்பு.**

**பி.மா.: அருமை உயிர்க்கு என்போடு இயைந்த**
**தொடர்பு அன்போடு இயைந்த வழக்கு என்ப.**

பொருள் : அருமை உயிர்க்கு - மக்களுயிர்க்கு, என்போடு இயைந்த தொடர்பு - உடம்போடு ஏற்பட்டுள்ள தொடர்பினை, அன்போடு இயைந்த வழக்கு என்ப - அன்புடன் இயைய வழங்கும் வழக்கம் என்று அறிந்தோர் கூறுவார்கள்.

கருத்து: அன்பு, உடலுயிர்க்குள்ள தொடர்பு.

உடல் உயிர் இரண்டிற்கும் உள்ள தொடர்பைக் கூறினார் எனினும், பிற தொடர்பும் கொள்க.

## 74

**அன்பீனு மார்வ முடைமை யதுவீனு**
**நண்பென்னு நாடாச் சிறப்பு.**

**பி.மா.: அன்பு ஆர்வம் உடைமை ஈனும் அது நண்பு**
**என்னும் நாடாச் சிறப்பு ஈனும்.**

பொருள்: அன்பு - தொடர்புணர்ச்சியானது, ஆர்வம் உடைமை ஈனும் - எல்லா உயிர்களிடத்தும் விருப்பம் உடை யனாம் தன்மையை உண்டாக்கும், அது - அவ்விருப்பமுடை யனாந் தன்மையானது, நண்பு என்னும் நாடாச் சிறப்பு ஈனும்- தொடர்பு கருதிப் போற்றுதலும், தொடர்பின்மை கருதித் தூற்றுதலும் இல்லாததான அளவிறந்த சிறப்பை உண்டாக்கும்.

கருத்து: அன்பு நிலை அருள் நிலையிற் சேர்க்கும்.

அருள் என்பது, அன்பு ஈனும் குழவி என்று மேற்காட்டுவார்; ஈண்டும் அன்பு என்பது முதிர்ச்சிக்கண் அருளாகும் என்று மொழிந்தார். ஆர்வம் என ஈண்டுக் குறித்தது, எல்லா உயிர்கண் மாட்டும் எழும் விருப்பத்தை, நாடாச் சிறப்பு என்றது, நாடுதற்கரிய சிறப்பை; அஃதாவது இவர் நமர், இவர் பிறர் என்ற எண்ணமே தோன்றாத நிலையில் உயிர்கண் மாட்டு எழுவதோர் அருளை.

## 75

**அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்**
**தின்புற்றா ரெய்துஞ் சிறப்பு.**

**பி.மா.: வையகத்து இன்பு உற்றார் எய்தும் சிறப்பு**
**அன்பு உற்று அமர்ந்த வழக்கு என்ப.**

பொருள்: வையகத்து - உலகத்தின்கண், இன்பு உற்றார் - இல்லந் துறந்து மக்கட்குத் தொண்டு செய்தலினால் இன்பம் எய்தியவர், எய்தும் சிறப்பு - பெறுவதோர் நன் மதிப்பானது, அன்பு உற்று அமர்ந்த வழக்கு என்ப-அன்பு உடையராகி இல்லறத்தோடு பொருந்தியதா லாகிய பயன் என்று அறிவுடையார் கூறுவர்.

கருத்து: துறந்தார் அடையும் சிறப்பும் இல்லறத்தோ டியைந்த அன்பாலானது.

வழக்கு - பயன், ஆகுபெயர்.

மனைவி மக்கள்பால் உற்ற அன்பு, அருளாக அஃது அனைத்துயிரும் தன்னுயிரென் றெண்ணுவதோர் பண்பாடே, உலக மக்களின் நலன் கருதித் தொண்டு செய்யச் செய்ததன்றோ எனின், அவனுக்கு நன்மதிப்பு ஏற்பட்டது. அந்நன் மதிப்புக்கு அவன் அன்பே காரணம் என்பார், இவ்வாறு கூறினார் என்க. அஃதேயுமன்றி, ஒருவனின் உடல் வீழ்ந்த பின்னரும் மற்றொரு நிலை உண்டென்னும் பிறர்நூற் கொள்கையையும் மறுப்பார் வையகத்து இன்புற்றார் என்றார்.

## 76

**அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்**
**மறத்திற்கு மஃதே துணை.**

**பி.மா.: அறியார் அறத்திற்கே அன்பு சார்பு என்ப**
**மறத்திற்கும் அஃதே துணை.**

பொருள்: அறியார் - அறியாதார், அறத்திற்கே - அறஞ் செய்தற்கு மட்டுந்தான், அன்பு சார்பு என்ப - அன்பானது துணை யாகும் என்று கூறுவார்கள். மறத்திற்கும் - வீரச் செயலுக்கும், அஃதே துணை - அந்த அன்பே துணையாவது.

**கருத்து:** தீமையினின்று மீட்க, அத்தீமையின் மேல் விரைவதோர் வீரத்திற்கும் அன்புதான் துணை செய்கின்றது.

**ஆய்ந்து தெரிந்த புகன்மறவ ரோடு**

**படுபிணம் பிறங்க நூறிப், பகைவர்**

**கெடுகுடி பயிற்றிய கொற்ற வேந்தே - பதிற்றுப் பத்து 69.8.10**

என்பது போன்ற இடங்களில் மறத்திற்கும் அன்பு துணையாதல் காண்க.

## 77

**என்பி லதனை வெயில்போலக் காயுமே**
**யன்பி லதனை யறம்.**

**பி.மா.:அறம் என்பு இலதனை வெயில்போல**
**அன்பு இலதனை காயும்.**

பொருள்: அறம் - அறமானது, என்பு இலதனை - என்பு இல்லாத தசைக் கூட்டை, வெயில்போல - வெயிலானது காய்ந்தாற்போல், அன்பு இலதனை காயும் - அன்பில்லாத உடம்பைக் காய்ந்து பொசுக்கிப் பயனற்றதாக்கி விடும்.

**கருத்து:** அன்பில்லா உடம்பை அறம் பொசுக்கி விடும்.

என்புள்ள உடம்பை வெயில் காய்ந்து பொசுக்குவது அரிது என்பார், என்பிலதனை வெயில் போல என்றார். அன்புள்ள உடம்பை அறம் பொசுக்கித் தீர்ப்பது அரிது என்பார், அன்பில தனை அறம் என்றார்.

அன்பில்லா உடம்பை அறம் பொசுக்கவே, அவ்வுடம்பு பெறத்தக்க பேறுகளை இவ்வுலகிலிருந்தே பெற இயலாமை அறிக. அன்பில்லாத இடத்தும் உயிர் உண்டேயன்றோ, பெறத்தக்க பேறுகளைப் பெற என்ன தடை என்று கேட்பார்க்கு விடை என்னவெனில், அன்பு இல்லா தொழிய, உயிர் இருத்தலால் ஆவது ஒன்றுமில்லை என்பதாம். உயிர் என்பதைத் திருவள்ளுவர் இன்றியமையாப் பொருளாகக் கருதவே யில்லை. அன்பையே அவ்வாறு கருதினார் என்பது கருதத்தக்கது.

## 78

**அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று.**

**பி.மா.: அகத்து அன்பு இல்லா உயிர் வாழ்க்கை வன்
பாற்கண் வற்றல்மரம் தளிர்த்தற்று.**

பொருள்: அகத்து - மனத்தின் கண், அன்பு இல்லா உயிர் - அன்பு இல்லாத உயிரானது, வாழ்க்கை - உடம்புடன் கூடி வாழ்வதானது, வன்பாற்கண் - வன்னிலத்தின் கண், வற்றல் மரம் - பட்ட மரம், தளிர்த்தற்று - தளிர்த்தால் அதை ஒக்கும்.

கருத்து: வன்னிலத்திற் பட்டமரம் தளிர்க்காதது போல அன்பில்லாத உயிரோடு கூடிய உடம்பு வாழ்தல் என்று மில்லை.

முன்னைய செய்யுட் கருத்தையே வலியுறுத்தினார். வற்றல் - தொழிற் பெயர். வற்றல் மரம் - பட்டமரம், பண்புத் தொகை நிலைத் தொடர்.

**- *குயில், கிழமை இதழ்,* 31. 1. 1961**

## 79

**புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
யகத்துறுப் பன்பி லவர்க்கு.**

**பி.மா.: யாக்கை அகத்து உறுப்பு அன்பு இலவர்க்கு
புறத்து உறுப்பு எல்லாம் எவன் செய்யும்.**

பொருள்: யாக்கை - உடம்பின், அகத்து உறுப்பு - அடிப்படை உறுப்பாகிய, அன்பு இலவர்க்கு - அன்பில்லாதவர் கட்கு, புறத்து உறுப்பு எல்லாம் எவன் செய்யும் - இன்றியமை யாமைக்குப் புறம்பான கண் முதலிய உறுப்புக்கள் எல்லாம் வாழ்க்கைக்கு என்ன உதவியைச் செய்து விடும் (செய்யமாட்டா என்றபடி).

கருத்து: யாக்கையில் கண் முதலிய உறுப்புக்களினும் மனத்தின் அன்பு ஆகிய உறுப்பு இன்றியமையாதது.

மற்றொரு வகையானும் அன்பினதுயர்வு கூறினார். மற்றைய புறத்துறுப்புகளின் வரிசையிலேயே உயிரையும் வைத்துக் காட்டினார் இச் செய்யுளில், ஊன்றியுணர்க.

அன்பினுயர்வு கூறவே, இல்லறத்தோடுள்ள தொடர்பும் கூறினார் ஆயிற்று. யாக்கை - யாத்தல், கட்டுதல் தொழிற் பெயர். தோல், நரம்புகளால் கட்டியது போன்றமையின் உடலுக்கு ஆகுபெயர்.

## 80

**அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்**
**கென்புதோல் போர்த்த வுடம்பு.**

**பி.மா.: உயிர்நிலை அன்பின் வழியது அஃது இல்லார்க்கு உடம்பு என்பு தோல் போர்த்த.**

பொருள்: உயிர்நிலை - உயிர் நின்ற உடம்பாவது எது எனில், அன்பின் வழியது - அன்பை முதலாக் கொண்டு அதன் வழியாக அமைந்தது. அஃது இலார்க்கு - அந்தக் காரணப் பொருளாகிய அன்பு இல்லாதவர்க்கு உள்ள உடம்பு உடம்புகளோ எனில், என்பு தோல் போர்த்த - என்பும் தோலும் போர்த்தவை.

கருத்து: உயிருடன் கூடிய உடல் அன்பினின்று வந்தது.

இல்லறத்திற்கு அன்பு இன்றியமையாதது என்பதும், அவ்வன்பு உயிர் வாழ்வுக்கே காரணமானதென்பதும் இவ்வதி காரத்தால் விளக்கி யருளினார்.

- *குயில், கிழமை இதழ்,* **7. 2. 1961**

## அதிகாரம் - 9

## விருந்தோம்பல்

அஃதாவது, விருத்தினரைப் பேணுதல். விருந்தினராவார், கடல் கோட்பட்டு வரும் குமரி நாட்டினின்று அவ்வப்போது வந்துறுவாரும், தெய்வ வரிசையில் வைத்தெண்ணப்படும் சான்றோர், அரசர் முதலியோரும் அவரல்லாத பிறரும். (43 குறள் உரை பார்க்க)

விருந்து - புதுமை, புதுமையாய் வந்தோர்க்கு ஆகுபெயர். உண்பித்தல் என்னாது ஓம்பல் என்றது, உண்பித்தலோடு அமையாது, எதிர்கோடல், முகமலர்தல், அவர் விருப்பம் அறிதல் முதலியவும் குறித்தற்கு. விருந்து அன்பின் வழியது ஆதலின், அன்புடைமைக்குப் பின் இது வைக்கப்பட்டது.

### 81

**இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு.**

**பி.மா.:** **இருந்து ஓம்பி இல் வாழ்வது எல்லாம் விருந்து ஓம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு.**

பொருள்: இருந்து - அறத்தின்கணிருந்து, ஓம்பி - பொருள் காத்து, இல்வாழ்வது எல்லாம் - இல்லத்தின் கண் வாழ்ந்திருப்பதெல்லாம் எதற்கு எனில், விருந்து ஓம்பி - வரும் விருந்தினரைப் பேணி, வேளாண்மை செய்தற் பொருட்டு - உதவி செய்வதன் பொருட்டேயாகும்.

கருத்து: இல்வாழ்வது விருந்தினரைப் பேணுதல் நோக்கத்தக்கது.

### 82

**விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா**
**மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.**

**பி.மா.:** **தான் உண்டல் சாவா மருந்து எனினும் விருந்து புறத்தது ஆ வேண்டற்பாற்று அன்று.**

**பொருள்:** தான் உண்டல் - தான் உண்ண இருப்பது, சாவா மருந்து எனினும் - சாவாமைக்கு ஆதரவான மருந்தே ஆயினும், விருந்து புறத்தது ஆ - வந்த விருந்தினர் ஒரு புறத்தே இருக்க, அவரை விட்டுத்தானே, வேண்டற்பாற்று அன்று - உண்ணுமோர் பான்மையுடையதன்று. (உண்ணுதல் கூடாது என்றபடி).

**கருத்து:** மருந்தேயாயினும், விருந்தோடுண்ணுதல் வேண்டும்.

அமிழ்து - மேனின்று அமிழ்வது, மழை, அது சாவா மருந்து ஆத லின் அப்பெயராலும் வழங்கலாயிற்று. சாவா மருந்து - சாவதைத் தவிர்க்கும் மருந்து. நாளடைவில் இனிய பொருளுக்கெல்லாம் ஆயிற்று என்க.

## 83

**வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை**
**பருவந்து பாழ்படுத லின்று.**

**பி.மா.:** **வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை**
**பருவந்து பாழ்படுதல் இன்று.**

பொருள்: வருவிருந்து - வந்த வருந்தினரை, வைகலும் - நாடோறும், ஓம்புவான் - பேணுவானது, வாழ்க்கை - நல் வாழ்க்கையானது, பருவந்து - வருந்தி, பாழ்படுவது இன்று - கேடுறுவது இல்லை.

**கருத்து:** வாழ்வு விருந்திட்டுக் கேடுற்றது என்பது இல்லை.

வருவிருந்து ஓம்புவான் புகழ் செய்தான் ஆதலின், அவன் வாழ்வு கேடுறுதல் இல்லை என்பார் பாழ்படுதல் இன்று என்றார்.

வருவார்க்கு ஊட்டலின் வளங்குறையாதென ஐய மறுத்தார் இப்பாட்டால்.

வருவிருந்து - இறந்த கால வினைத்தொகை நிலைத் தொடர். வந்த விருந்து என விவரிக்க.

**- *குயில், கிழமை இதழ்,* 7. 2. 1961**

■ ■ ■